# <u>இயல்பு கூட்டப்பொருட்கள்</u>

1. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.23, பள்ளவிளை, நீண்டகரை கிழக்கு கிராமம் புல எண்.349/4, 350/1, 2, 5, 61, 612 இல் 9137 ச.மீ பரப்பளவு இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான அனுமதி வழங்க கேட்டு திருமதி. சரோஜினி வில்சன் என்பவர் கன்னியாகுமரி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் விண்ணப்பம் செய்ததில் கன்னியாகுமரி மாவட்ட நகர் ஊரமைப்பு உறுப்பினர் செயலர் அவர்களின் செயல்முறை ஆணை உத்தரவு கடிதம் ந.க.எண்.188/2021 நாஉதிகு நாள்.25.02.2021 இன்படி மேற்படி மனைப்பிரிவிற்கு சிறப்பு நிபந்தனைகள் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகளுடன் ம.வ/நாஉதிகு எண்.05/2021 என தொழில்நுட்ப அனுமதியும் தி.க.ம.வ /நாஉதிகு எண்.08/2021 என திட்ட அனுமதியும் வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட நிபந்தனைகளின்படி உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட பொது ஒதுக்கீடு சாலை மற்றும் பூங்கா இடங்கள் உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்து மனை உரிமையாளர் பட்டா சமர்பித்துள்ளார்.

மேற்படி மனைப்பிரிவில் குடிநீர் வசதி, கழிவு நீர் செல்லும் வசதி, மின்கம்பங்கள் போன்ற பணிகளுக்காக மாநகராட்சி பொறியாளர் அவர்களின் அறிக்கையினை ரூ.1,30,000/- மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தி அதன் ரசீது நகல் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் மனைப்பிரிவு அனுமதி கட்டணம் ரூ.15,000/- மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தி ரசீது நகல் இணைக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க ஏதுவாக மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட பொது ஒதுக்கீடு, சாலை மற்றும் பூங்கா (பொது ஒதுக்கீடு 34.20 ச.மீ, சாலை பரப்பு – 2336.51 ச.மீ மற்றும் பூங்கா பரப்பு – 688.71 ச.மீ) பகுதியினை மாநகராட்சியின் பராமரிப்பில் எடுத்துகொள்ளவும், மேற்படி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி அனுமதி உத்தரவு வழங்கவும் மன்ற அங்கீகாரத்திற்காக.

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.1494/2021/எப்1

**தீர்மானம் எண்.187 – அங்கீகரிக்கப்பட்டது.**

2. இம்மாநகராட்சிக்குட்பட்ட வண்ணான்விளை வடிவீஸ்வரம் கிழக்கு கிராமம் புல எண்.190/6, 6 இல் 6300 ச.மீ பரப்பளவுள்ள இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்க கேட்டு திரு T.கிருஷ்ணசாமி, திரு.S.முருகேசன்,மற்றும் திரு..நாராயண சுவாமி என்பவர்கள் கன்னியாகுமரி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் விண்ணப்பம் செய்ததில் கன்னியாகுமரி மாவட்ட நகர் ஊரமைப்பு உறுப்பினர் செயலர் அவர்களின் செயல்முறை ஆணை உத்தரவு கடிதம் ந.க.எண்.2035/2020 நா.உதிகு நாள்.22.02.2021 –இன் படி மேற்படி மனைப்பிரிவிற்கு ம.வ/நாஉதிகு எண்.02/2021 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப அனுமதியும், தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 இல் பிரிவு 49 இன் கீழ் திட்ட அனுமதி எண்.

தி.அ.ம.வநாஉதிகு எண்.05/2021 என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதியும் வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவில் தார்சாலை தரமானதாக அமைக்கப்பட்டுள்ளதகாவும் மழைநீர் வடிகால் ஓடை ஓடையானது ஒரு பகுதி குழாய் வழியாகவும், மற்றொரு பகுதி சிமெண்ட் தளம் மூலம் அமைக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் மின்கம்பங்கள் மற்றும் குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கவும் செலவுத்தொகை ரூ.80000/- செலுத்தி மாநகர பொறியாளர் தமது அறிக்கையில் தெரிவித்ததன் அடிப்படையில் மனை உரிமையாளர்களால் ரு.80,000/- மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தி ரசீது நகல் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் மனைப்பிரிவிற்கு அனுமதி கட்டணம் ஏக்கர் ஒன்றிற்கு ரூ.5000/- ரூ.10,000/- மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தி ரசீது நகல் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்கண்ட மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகளை உட்பிரிவு செய்து ஆணையாளர் பெயருக்கு பட்டா சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட மனைப்பிரிவிற்கு தானபத்திர அடிப்படையிலான அடிப்படை வசதிகளை மாநகராட்சி பராமரிப்பிற்கும், பொறுப்பிற்கும் பெற்றுக்கொள்ளவும், மேற்படி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி அனுமதி உத்தரவு வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்காக.

<u>அலுவலக குறிப்பு</u> - அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.11701/2019/எப்1

**தீர்மானம் எண்.188 – அங்கீகரிக்கப்பட்டது.**

3. தமிழ்நாடு தகவல் ஆணையம் வழங்கிய உத்தரவு எண். 8769/, நாள். 20.01.2021 இவ்வழக்கில் மனுதாரர் திரு.ராயப்பன் என்பவருக்கு நஷ்ட ஈடாக 1000 ரூபாயும், மற்றும் தகவல் வரிசை எண்.4, 5 மற்றும் 6க்கு தகவல் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. இப்பொருள் தொடர்பாக தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் உத்தரவு மீது மதுரை உயர்நீதிமன்றத்தில் மாநகராட்சி சார்பாக வழக்கு தாக்கல் செய்யும் பொருட்டும் மற்றும் தடை ஆணை பெறுவதற்கும் மாநகராட்சி வழக்கறிஞர் திரு.ஆதிமூலபாண்டியன் அவர்களுக்கு, இவ்வலுவலக கடிதம் நாள்.20.05.2020 அன்று அனுப்பி வைக்கப்பட்டது. அதன்படி மேற்படி வழக்கு மதுரை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு எண்.WMP(MD).8764/2020 மற்றும் () .9758/2020 இவ்வழக்கு தடையாணை பெறப்பட்டது. அதற்கான செலவு தொகையாக Profession / ரூ.15000/- ரூ.5000/- மற்றும் ரூ.5000/- ஆக மொத்தம் ரூ.25000/- வழங்க 22.09.2020-ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசு ஆணை எண்....1033, நாள்.01.11.2010-ல் தெரிவித்துள்ள படி வழக்கு தாக்கல் செய்ய ரூ.10000/. மற்றும் வழக்கறிஞர் கோரிய படி ரூ.5000/- மற்றும் ரூ.5000/- ஆக மொத்தம் ரூ.20000/- வழங்குவதற்கு அங்கீகாரத்திற்காக.

ஏற்கனவே இதே வழக்கிற்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.7500/- வழங்க மாமன்ற தீர்மான எண்.11, நாள்.29.01.2021 அங்கீகரிக்கப்பட்ட தீர்மானத்தை ரத்து செய்தும் மற்றும்

மேற்படி வழக்கு சம்மந்தமாக ஏற்படும் அனைத்து செலவினங்களுக்கும் மாமன்றத்தின் அங்கீகாரத்திற்காக.

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.4549/2018/த.அ.உ.ச

**தீர்மானம் எண்.189 – அங்கீகரிக்கப்பட்டது.**

4. இம்மாநகராட்சி வரைபடத்தில் அனைத்து உட்கட்டமைப்புகளும் அடங்கிய வரைபடம் (GIS ) தயார் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாளேடுகளில் பிரசுரம் செய்த வகைக்கு ESS.ESS Publication , நிறுவனத்திற்கு விளம்பர கட்டணம் ரூ.16800/- வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்

மதிப்பீட்டு எண்.56/2020-2021

**தீர்மானம் எண்.190 – அங்கீகரிக்கப்பட்டது.**

5. இம்மாநகராட்சியில் ஒப்பந்த பணிகள் செய்து பட்டியல் தொகையில் பிடித்தம் செய்த வைப்புத்தொகை வழங்கப்படவில்லை என தெரிவித்து சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் () . 17961 2019 மற்றும் அதனை தொடர்ந்து தொடரப்பட்ட Contempt () . 70/2021 திரு..ஜெயசிங் என்பவரால் தொடரப்பட்ட வழக்கில் ஆஜராகிய வகைக்கு ரூ.15000/- (7500+7500) திரு..ஆதிமூலபாண்டியன் வழக்கறிஞருக்கு வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்காக.

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.5096/2020/இ1

**தீர்மானம் எண்.191 – அங்கீகரிக்கப்பட்டது.**

6. இம்மாநகராட்சியில் பொறியியல் பிரிவில் ஒப்பந்த பணிகள் செய்த ஒப்பந்ததாரர்கள் பணியில் ஈடுபடுத்திய பணியாளர்களுக்கு தொழிலாளர் நல நிதி செலுத்தப்படவில்லை என தெரிவித்து 09/2012 முதல் 08/2018 வரையுள்ளது ரூ.16,55,14,204/- மாநகராட்சி அலுவலகத்தால் செலுத்தப்படவில்லை என தெரிவித்து EPF.RRC No.M 517/0079435/24/04/2020/502/35 .24.04.2020-ன் படி இம்மாநகராட்சி வங்கி கணக்குகள் முடக்கம் செய்யப்பட்டது. மேற்படி உத்தரவிற்கு தடையாணை பெறுவதற்கு சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளை வழக்கு எண்.() .1582/2021 மற்றும் ().1846/2021 –ன் படி தடையாணை பெறப்பட்டமைக்கு திரு..செல்லபாண்டியன் கூடுதல் வழக்கறிஞர் ரூ.50,000/- மற்றும் திரு..ஆதிமூலபாண்டியன் வழக்கறிஞர் ரூ.25,000/- வழக்கறிஞர் கட்டணம் வழங்க கேட்கப்பட்டுள்ளது. அதன்படி தொகை வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.2795/2016/இ1

**தீர்மானம் எண்.192 – அங்கீகரிக்கப்பட்டது.**

7. இம்மாநகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண்.22, எறும்புகாட்டில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் மராமத்து பணிகள் மேற்கொண்டு தமிழக முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக் திட்டம் செயல்படுத்திடவும், மேற்படி பணியின் முக்கியத்துவம் கருதி நாகர்கோவில் மாநகராட்சி சட்டம் 2019 (தமிழ்நாடு சட்டம்11/2019) பிரிவு 15-ன் கீழ் ரூ.3,10,000/- மதிப்பீட்டில் திரு..விஜயகுமார் ஒப்பந்ததாரர் மூலம் பணி செய்யவுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

<u>அலுவலக குறிப்பு</u> – மன்றம் பதிவு செய்யலாம்

கோப்பு எண்.1381/2021/இ1

**தீர்மானம் எண்.193 – அங்கீகரிக்கப்பட்டது.**

8. இம்மாநகராட்சி பகுதிக்குட்பட்ட வாடு எண்.20, காந்திபுரத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் மராமத்து பணிகள் மேற்கொண்டு தமிழக முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக் திட்டம் செயல்படுத்திடவும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நாகர்கோவில் மாநகராட்சி சட்டம் 2019 (தமிழ்நாடு சட்டம்11/2019) பிரிவு 15-ன் கீழ் ரூ.2,90,000/- மதிப்பீட்டில் திரு..விஜயகுமார் ஒப்பந்ததாரர் மூலம் பணி செய்யவுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

<u>அலுவலக குறிப்பு</u> – மன்றம் பதிவு செய்யலாம்

கோப்பு எண்.1068/2021/இ1

**தீர்மானம் எண்.194 – அங்கீகரிக்கப்பட்டது.**

9. இம்மாநகராட்சிக்கு புதிய அலுவலக கட்டிடம் பாலமோர் சாலையில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான கலைவாணர் கலையரங்க கட்டிடத்தினை இடித்து அப்பகுதியில் புதிய அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு மூலதன மானியம் / இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்புதல் நிதி (/& ) 2017-2018-ன் கீழ் ரூ.5.00 கோடி மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் கடிதம் எண்.15040/2017/இ1, நாள்.13.04.2018-ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு தற்போது கட்டிட பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளது.

01.03.2019 முதல் நாகர்கோவில் நகராட்சியினை மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதால் மாமன்றத்திற்கு தகுந்தவாறு கட்டிட வடிவமைப்பில் மாறுதல் செய்து மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மண்டல அலுவலர்கள் அலுவலகங்கள் அமைக்கும் விதமாக கூடுதல் தளம் மற்றும் உயர்மட்ட கூரை () அணுகு சாலை () மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் () செய்திடவும் ரூ.5.50 கோடிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதில் மேற்படி அலுவலக கட்டிடத்தில் அத்தியாவசிய பணிகளை மேற்கொண்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரும் விதமாக ரூ.3.00 கோடி இம்மாநகராட்சியின் வளர்ச்சி கட்டண நிதியின் ஈடு செய்யவும் எதிர்வரும் காலத்தில் நிதி ஆதாரம் மேன்மையடைந்த பின்னர் மேற்படி தொகை வளர்ச்சி கட்டணம் தலைப்பிற்கு மாற்றம் செய்யப்படும் என்பதால் வளர்ச்சி கட்டண நிதியில் இருந்து ரூ.3.00 கோடியும் மாநகராட்சி பொதுநிதியில் இருந்து ரூ.2.50 கோடியும் ஆக மொத்தம் ரூ.5.50 கோடிக்கு புதிய அலுவலக கட்டிடத்திற்கு கூடுதல் பணிகள் செய்திட மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.1642/2020/இ1

**தீர்மானம் எண்.195 – அங்கீகரிக்கப்பட்டது.**

10. இம்மாநகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள கணினிகளுக்கான inverter 1000 watt Sine wave type with 150AH T 7 எண்ணம் வாங்கிட விலைப்புள்ளி பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளின் விபரம் கீழ்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| 1 | M/s. Maatharasi Computer seervice, Nagercoil | Rs.21500/- Per unit |
| 2 | M/s. Zigma systems | Rs.22349/- per unit |
| 3 | M/s. Nanotech Computer | Rs.22149/- per unit |

<u>அலுவலக குறிப்பு</u> – பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள /. என்பவரது விலைப்புள்ளியினை ஏற்று பணி செய்யவும், அதற்கான செலவீனம் ரூ.160000/-க்கும் மன்றத்தின் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.3163/2021/இ3

**தீர்மானம் எண்.196 – அங்கீகரிக்கப்பட்டது.**

11. இம்மாநகராட்சி அலுவலக கணினி பிரிவிற்கு தேவையான கீழ்கண்ட உதிரி பொருட்கள் தேவைப்படுகிறது.

| SL.No | Name of the item | Required quantity |
|---|---|---|
| 1 | TVSE -DMP ribbon cartridge 130col. With ink bank | 30 Nos |
| 2 | TVSE-DMP ribbon cartridge 80col.With ink bank | 30 Nos |
| 3 | ESPSON -DMP LQ-310 ribbon cartridge 80 col | 30 Nos |
| 4 | Mouse with USB provison | 15 Nos |
| 5 | Keyboar with USB provison | 10 Nos |

மேற்படி உதிரி பொருட்கள் வாங்க பெறப்பட்ட மூன்றுவிலைப்புள்ளிகளின் விபரம் கீழ்கண்டவாறு

| | | |
|---|---|---|
| 1 | M/s. Maatharasi Computer service, Nagercoil | Rs.1230 Per item |
| 2 | M/s. Villary Computers | Rs.1290 Per item |
| 3 | M/s. Next Gen | Rs.1340 Per item |

<u>அலுவலக குறிப்பு</u> – பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள /. என்பவரது விலைப்புள்ளியினை ஏற்று பணி செய்யவும், அதற்கான செலவீனம் ரூ.1230/-க்கும் மன்றத்தின் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.4811/2021/இ3

**தீர்மானம் எண்.197 – அங்கீகரிக்கப்பட்டது.**

12. நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான வலம்புரிவிளைஉரக்கிடங்கில் 14.03.2021 அன்று திடிரென தீவிபத்து ஏற்பட்டு காற்று பலமாக வீசியதின் காரணமாக தீ உரக்கிடங்கின் அனைத்து பகுதிகளிலும் பரவியது. அதனை தீயணைப்பு துறை மூலம் அணைக்கும் பணி நடைபெற்றது, மேற்படி பணிக்கு 8 எண்ணம் பொக்லைன் இயந்திரங்கள், தனியார் டேங்கர் லாரிகள் மூலம் தண்ணீர் எடுத்து வந்த வகைக்கும், மற்றும் தீயணைப்பு துறை பணியாளகள், மாநகராட்சி தூய்மை பணியாளர்கள் மூலம் தீயணைப்பு பணி மேற்கொள்ளப்பட்டு தீ முழுவதும் 22.03.2021 அன்று அணைக்கப்பட்டது. மேற்படி பணி மேற்கொள்ளப்பட்ட செலவினத்திற்கு கீழ்கண்டுள்ளபடி பட்டியல் தொகை வழங்க திரு V.ஜாண் ஜோனாபார்க் சுகாதார ஆய்வாளரால் பட்டியல் சான்றிட்டு அறிக்கை சமப்பிக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | பொக்லைன் வாடகை -469.1 மணி நேரம் (1 மணி நேர வாடகை ரூ.1350/-) | T.ஐயப்பன்,ISSN Earth Movers | 6.99.285/- |
| 2 | தீயணைப்பு பணிக்கு தண்ணி தனியார் டேங்கர் லாரி மூலம் எடுத்து வந்த வகைக்கு (548 லோடு) | குமார் வாட்டர் சப்ளை வெட்டூர்ணிமடம், நாககோவில் | 3,89,800/- |
| 3, | மேற்படி தீயணைப்பு பணியில் ஈடுபட்ட தீயணைப்பு துறை பணியாளகள் மற்றும் மாநகராட்சி தூய்மை பணியாளகளுக்கு டீ, டிபன், கரும்புசாறு மற்றும் சாப்பாடு வாங்கப்பட்ட வகைக்கு | திரு..ஐயப்பன், ஒப்பந்தக்காரர் | 2,75,335/- |
| 4 | தீயணைப்பு வாகனங்கள் மற்றும் இயந்திரங்களுக்கு பெட்ரோல், டீசல் சப்ளை செய்த வகைக்கு | N.K.ராமசாமி, இந்தியன் ஆயில் டீலர், நாககோவில் | 1,29,633/- |
| | | மொத்தம் | 14,94,053/- |

மேற்படி பட்டியல் தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து சம்மந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கும் பொருட்டு அங்கீகராத்திற்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு-</u> 1. அங்கீக்கலாம்

2. அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்கள் ஒப்புதலுடன் பட்டியல் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதை அளித்து அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.3780/2021/எச்.1

**தீர்மானம் எண்.198 – அங்கீகரிக்கப்பட்டது.**

13. கொரோனா வைரஸ் நோய் தொற்றை தடுப்பதற்காக, மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாட்டில் 25.03.2020 முதல் தேசிய பேரிடர் மேலாண்மைச்சட்டத்தின் கீழ், ஊரடங்கு உத்தரவு பல்வேறு தளர்வுகளுடன் அமுலில் இருந்து வருகிறது.

இந்நிலையில் தற்போதுள்ள நோய் பரவல் நிலை, வெளிநாடுகளில் உருமாறிய கொரோனா வைரஸின் தாக்கம், அண்டை மற்றும் இதர வெளிமாநிலங்களில் அதிகத்து வரும்

கொரோனா வைரஸ் பாதிப்பிற்குள்ளானவகளின் எண்ணிக்கை ஆகியவற்றை கருத்தில் கொண்டு, கொரோனா வைரஸ் நோய் தொற்றை தடுப்பதற்காக , தேசிய பேரிடர் மேலாண்மை சட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் பொது ஊரடங்கு உத்தரவு, ஏற்கனவே நடைமுறையில் உள்ள பல்வேறு தளர்வுகளுடனும், கட்டுப்பாடுகளுடன் நீட்டிப்பு செய்யப்பட்டு தமிழ்நாடு அரசு 08.04.2021 அன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதன்படி, இம்மாநகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சக்கை நடவடிக்கை முழு வீச்சில் மேற்கொள்ளும்பொருட்டு, தேவையான பொது சுகாதார தளவாட சாமான்களான சுண்ணாம்பு, பிளீச்சிங் பவுடர், கிருமி நாசினிகள், முககவசம், கையுறை, முழு கவச உறைகள் மற்றும் இதர பாதுகாப்பு உபகரணங்கள் அனைத்தும் 6 மாத கால தேவைக்கு கொள்முதல் செய்யவும், மேலும் உருமாறிய கொரோனா குறித்த விழிப்புணவு பதாகைகளுடன் ஆட்டோக்களில் பொதுமக்கள் அறியும் வண்ணம் விழிப்புணவு பிரச்சாரம் செய்யவும், மேலும் இம்மாநகராட்சி பகுதிக்குட்பட்ட பேருந்து நிலையங்கள், மாநகரின் முக்கிய சந்திப்புகள், முக்கிய சாலைகள் மற்றும் தொற்று கண்டறியும் பகுதிகளில் TATA ACE ஆட்டோக்கள் மூலம் கிருமி நாசினி தெளிக்கும் பணி மேற்கொள்ளவும் மற்றும் இதர அனைத்து கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கும், அதற்குண்டான செலவினங்களுக்கும் ஒப்புதலுக்கும், அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>- 1.ஒப்புதல் அளித்து அங்கீகரிக்கலாம்

2.அவசர அவசியம் கருதி கொரேனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கும் பொருட்டு ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் ஒப்புதல் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.4757/2021/எச்.1

**தீர்மானம் எண்.199 – அங்கீகரிக்கப்பட்டது.**

14. இம்மாநகராட்சி பொது சுகாதாரபிவு நகர்புற சுகாதார மையங்களில் பணியாற்றி வரும் நகர சுகாதார செவிலியர்களுக்கு கீழ்கண்டுள்ள பட்டியலில் கண்டுள்ள பணியாளர்களுக்கு 2020-2021 –ம் ஆண்டிற்கான சீருடைப்படி வழங்க அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் பதவி | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | திருமதி P.ரெத்தினஜோதி, பகுதி சுகாதார செவிலியர் | 1000/- |
| 2. | திருமதி G.R.தங்கமணி, பகுதி சுகாதார செவிலியர் | 1000/- |
| 3. | திருமதி .பானுமதி, நகர சுகாதார செவிலியர் | 1000/- |
| 4 | திருமதி .கீதா, நகர சுகாதார செவிலியர் | 1000/- |
| 5, | திருமதி E.துளசி, நகர சுகாதார செவிலியர் | 1000/- |
| 6 | திருமதி Mஆன்றோ விமலா, நகர சுகாதார செவிலியர் | 1000/- |
| 7, | திருமதி J.விமலா, நகர சுகாதார செவிலியர் | 1000/- |
| 8, | திருமதி Gசாந்தி, நகர சுகாதார செவிலியர் | 1000/- |
| 9. | திருமதி P.விஜயகுமாரி, நகர சுகாதார செவிலியர் | 1000/- |

| | | |
|---|---|---|
| 10 | திருமதி P.ஜெயசீலி, நகர சுகாதார செவிலியர் | 1000/- |
| 11 | திருமதி P.லீலாபாய், நகர சுகாதார செவிலியர் | 1000/- |
| 12 | திருமதி ALSமேரிஜாக்குலின், நகர சுகாதார செவிலியர் | 1000/- |
| 13. | திருமதி T.சாந்தி, நகர சுகாதார செவிலியர் | 1000/- |
| 14. | திருமதி .தமிழரசி, நகர சுகாதார செவிலியர் | 1000/- |
| 15. | திருமதி .தேவசுந்தரி, நகர சுகாதார செவிலியர் | 1000/- |
| | மொத்தம் | **15,000/-** |

அலுவலக குறிப்பு – அ.அங்கீகக்கலாம்

ஆ.அரசாணை எண்,(நிலை)எண்.36 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) நாள் 05.04.2018-ன்படி மேற்கண்ட நகர்புற சுகாதார பணியாளர்களுக்கு ஆணையர் / தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலுடன் சீருடைப்படி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதை அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.5056/2021/எச்.1

**தீர்மானம் எண்.200 – அங்கீகரிக்கப்பட்டது.**

15. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வலம்புரிவிளை கலவை உரக்கிடங்கில் செயல்பட்டு வரும் எடை மேடைக்கு 2021-2022 –ம் ஆண்டிற்கு முத்திரை புதுப்பிக்கும் பொருட்டு முத்திரை கட்டணம் ரூ.4100/- (ரூபாய் நான்காயிரத்து நூறு மட்டும்) உதவி சட்டமுறை எடை அளவு, கட்டுபாட்டு அதிகாரி, நாகர்கோவிலுக்கு செலுத்தி,எடைமேடையின் வருடாந்திர முத்திரை பதிவினை புதுப்பிக்கவும், அதற்குண்டான செலவினத்திற்கும் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1. அங்கீகரிக்கலாம்

2. அவசர அவசியம் கருதி ஆணயர் / தனி அலுவலர் ஒப்புதல் பெற்று எடை மேடை வருடாந்திர முத்திரை புதுப்பிக்கும் கட்டணம் ரூ.4100/- செலுத்தி புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதை அங்கீகக்கலாம்.

கோப்பு எண்.4105/2021/எச்.1

**தீர்மானம் எண்.201 – அங்கீகரிக்கப்பட்டது.**

16. அரசாணை (4)எண்.2 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 26.02.2021-இன் படி சுய உதவி குழுக்கள் மூலம் நகராட்சி மற்றும் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் செயல்படுத்தப்பட்டுவரும் அம்மா உணவகங்கள் பணியாளர்களுக்கு தினசரி ஊதியம் ரூ.250/- லிருந்து ரூ.325/- ஆக உயர்வு செய்து வெளியிடப்பட்ட அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.9036/2015/அ.1

**தீர்மானம் எண்.202 – அங்கீகரிக்கப்பட்டது.**